# தமிழ் (தாள் 1)

இவ்வினாத்தாளில் இரண்டு வினாக்கள் உள்ளன. அவற்றுள் **<u>ஒன்றுக்கு மட்டும்</u>** விடையளிக்கவும். இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் மொத்தம் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

<u>வினா 1</u>

<u>நான் வயிறு குலுங்கச் சிரித்த ஒரு நாள்</u>

நீ உன் வாழ்க்கையில் செய்த ஒரு சம்பவம் உன்னை மட்டுமல்லாமல் உன்னைச் சுற்றி இருந்த அனவரையும் வயிறு குலுங்க ச் சிரிக்க வைத்தது. அந்தச் சம்பவத்தைப் பற்றி விவரித்து **<u>100 சொற்களுக்குக் குறையாமல்</u>** ஒரு கட்டுரை எழுது. கீழ் க்காணும் கேள்விகளை இந்தக் கட்டுரை எழுதுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

- இந்தச் சம்பவம் எங்கே நடந்தது?
- உன்னுடன் எத்தனை பேர் இருந்தார்கள்?
- நீ வேடிக்கையாகச் செய்த செயல் என்ன?
- உன்னுடன் இருந்தவர்கள் உன் செயலைப் பார்த்து என்ன செய்தார்கள்?
- உன் மனநிலை எப்படி இருந்தது?

**PRIMARY SCHOOL**

**SEMESTRAL ASSESSMENT 1 – 2014**

**TAMIL LANGUAGE - COMPOSITION**

**PRIMARY 6**

*வினா 2*

பின்வரும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு ***100 சொற்களுக்குக் குறையாமல்*** ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.




| | |
|---|---|
| தேர்வுத்தாள் | தோல்வியடைந்தாள் |
| கண்டிப்பார் | வீட்டிற்குப் போகப் பயந்து |
| குளிராகவும் பசியாகவும் | தீர்மானித்தாள் |
| வருத்தமடைந்து | தகவல் தெரிவித்து |

*Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள **(1,2,3 அல்லது 4)** நீள்வட்டத்தை நிழலிடு.*

## ‘அ’ பிரிவு

**A1.** வேற்றுமை

Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான *வேற்றுமை உருபேற்ற சொல்லைக்* கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

சிராங்கூன் வட்டாரத்தில் தமிழ் வணிகர்கள் பலர் வாணிகம் செய்து வந்தனர். அப்பகுதியில் மாணிக்கம் என்ற வணிகர் ஒருவரும் வாணிபம் செய்து பொருளீட்டி வாழ்ந்து வந்தார். அவருடைய *Q1*________ காரணம் அவர் ஓய்வு ஒழிச்சலின்றி எந்நேரமும் உழைப்பதேயாகும். *Q2*________ பொன் போல் போற்றிய அவர், வெட்டிப் பேச்சுப் பேசுவதில்லை; பிறர் காரியங்களில் தலையிடுவதில்லை. *Q3*________ வந்து ஆலோசனை கேட்கும் புதிய வியாபாரிகளுக்கு அவர் அமைதியான முறையில் புத்திமதி கூறுவார். அவர் பல வணிக நுணுக்கங்களை விருப்பு வெறுப்பின்றிக் கற்றுக் கொடுப்பார். *Q4*________ மனத்தில் தோன்றிய கருத்தை ஆணித்தரமாகக் கூறிவிடுவார். அவர் தம் *Q5*________ உள்ள பொருட்களை நியாயமான விலையில் விற்றார். நல்ல குணமுடைய *Q6*________ கடையில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. அதனால், அவர் மேலும் உயர்வடைந்தார்.

Q1.
1. உயர்வுடன்
2. உயர்வால்
3. உயர்வை
4. உயர்வுக்கு

( 2 )

Q2.
1. நேரத்தை
2. நேரத்தின்
3. நேரத்தால்
4. நேரத்தோடு

( 1 )

Q3. 1. மாணிக்கத்தை
2. மாணிக்கத்துடன்
3. மாணிக்கத்திடம்
4. மாணித்துக்கு ( )

Q4. 1. தன்னால்
2. தன்னுடைய
3. தன்னுடன்
4. தனக்கு ( )

Q5. 1. கடைக்கு
2. கடையில்
3. கடையை
4. கடையின் ( )

Q6. 1. அவ்வணிகரின்
2. அவ்வணிகரோடு
3. அவ்வணிகருக்கு
4. அவ்வணிகரால் ( )

A2. செய்யுள் / பழமொழி

Q7 முதல் Q12 வரையுள்ள *செய்யுள் / பழமொழிகளை* நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

Q7. ஓதுவது ______________.

1. கைவிடேல்
2. ஒழியேல்
3. விரும்பேல்
4. மறவேல் ( )

Q8. பெருமையும் ______________ தான் தர வருமே.

1. உடைமையும்
2. வறுமையும்
3. சிறுமையும்
4. கவலையும் ( )

Q9. விசும்பின் துளி _______________ அல்லால்மற் றாங்கே பசும்புல் தலைகாண்பு அரிது.

1. விழின்
2. வழியின்
3. வீழ்வதில்
4. வீழின்

( )

Q10. பகுத்தறியாமல் _______________.

1. செய்யாதே
2. துணியாதே
3. உழைக்காதே
4. உதவாதே

( )

Q11. அளவுக்கு _______________ அமுதமும் நஞ்சு.

1. மீறினால்
2. மாறினால்
3. மிஞ்சினால்
4. மேலானால்

( )

Q12. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க _______________ தன்னையே கொல்லும் சினம்.

1. காவாக்கால்
2. இல்லையேல்
3. காக்கவில்லையேல்
4. இல்லாவிட்டால்

( )

B3. <u>தெரிவுவிடைக் கருத்தறிதல்</u>

*பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி:*

விக்ரமபுரத்தை ஆண்டு வந்த அரசன் வீரசேனன் தன் அண்டை நாடான சிம்மபுரத்தைக் கைப்பற்ற திட்டமிட்டான். அவன் உடனே தன்னுடைய <u>தளபதி</u> செல்வநாயகனை அழைத்து சிம்மபுரத்தின் மீது படையெடுக்குமாறு ***ஆணையிட்டான்.*** செல்வநாயகன் பெரும் படையுடன் புறப்பட்டுச் சென்று, அவ்வூர் எல்லையில் முகாம் இட்டான்.

செல்வநாயகனின் வருகையைக் கேள்வியுற்ற சிம்மபுரத்து வேந்தன் தன் படை வீரர்களை ஒன்று திரட்டிப் போருக்கு அனுப்பினான். கடும் போர் மூண்டது. போர் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் சிம்மபுரத்து வீரன் ஒருவனுக்குத் தாகம் ஏற்பட்டது. எனவே அவன் தண்ணீர் கிடைக்கும் இடத்தைத் தேடித் தன் குதிரையைச் செலுத்தினான். அவ்வேளையில் போர்யானை ஒன்றின் பயங்கரப் பிளிறலைக் கேட்ட குதிரை ***மருண்டு***, மிக விரைவாய் ஓடத் தொடங்கியது. எவ்வளவோ முயன்றும் குதிரை வீரனின் கட்டுக்குள் அடங்காமல் மின்னல் வேகத்தில் சென்றது.

குதிரையைக் கட்டுக்குள் கொண்டுவர வீரனும் பலமுறை அதட்டியும் கத்தியும் பார்த்தான். அவனுடைய நாக்கு ***வறண்டு*** போனது. அவனுக்குக் களைப்பு அதிகமாயிற்று. இந்நிலையில் ஏதாவது ஒரு மரத்தை இறுகப் பிடித்துக்கொண்டால், குதிரை வேகமாக ஓடுவதை நிறுத்தலாம் என்ற முடிவுக்கு வந்தான் அவ்வீரன். குதிரை விரைவாக ஓடிக்கொண்டே இருந்தது. அச்சமயம் வழியில் ஒரு பனைமரம் தென்பட்டது. குதிரை பனைமரத்தின் அருகில் ஓடியபோது வீரன் உடனே அப்பனைமரத்தைப் பிடித்துக்கொண்டான். அந்த மரமோ வேரற்று, காய்ந்துபோய் இருந்தது. ஆதலால், அப்பனைமரம் அவன் கையோடு வந்துவிட்டது. வீரன் கையில் மரத்தோடு களைப்பு மிகுதியால் கத்திக் கொண்டே வந்தான்.

குதிரை மீண்டும் போர்களத்தை நோக்கி வந்தது. கையில் மரத்துடன் குதிரை மீது வந்த வீரனைக் கண்ட எதிரிகள் பீதியடைந்தனர். அவ்வீரன் சோர்வில் கத்துவதைக் கேட்ட எதிரிகள், அவன் ஆவேசத்துடன் தங்களைத் தாக்க வருவதாக எண்ணினர். "மரத்தையே பிடுங்கிப் போர் செய்யும் வீரனாக இருக்கிறானே. இவன் ஒருவனே இப்படி என்றால், இவனுக்குப் பின்னால் வரும் வீரர்கள் என்னென்ன ஆயுதங்களுடன் வருவார்களோ?" என்று எண்ணி அங்கிருந்த எதிரிகள் ஓட்டம் பிடித்தனர். சிறிது நேரத்தில் குதிரை கால் ஓய்ந்து நின்றது.

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. *ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.* அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q13. வீரசேனனின் நோக்கம் என்ன?

1. தளபதி செல்வநாயகனைப் போருக்கு அனுப்ப வேண்டும் என்பது
2. தளபதியுடன் தானும் போருக்குச் செல்ல வேண்டும் என்பது
3. சிம்மபுரத்தைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்பது ( )
4. சிம்மபுர நாட்டைத் தன் தளபதியிடம் கொடுக்க வேண்டும் என்பது

Q14. சிம்மபுர வீரனுக்கு என்ன நேர்ந்தது?

1. அவனுக்குத் தாகம் உண்டானது
2. அவனுக்குத் தாகம் தணிந்தது
3. அவனுக்குத் துணிவு ஏற்பட்டது
4. அவனுக்குப் பயங்கரச் சோர்வு ஏற்பட்டது ( )

Q15. குதிரை மருண்டதற்குக் காரணம் என்ன?

1. வீரன் குதிரையை அதட்டியதால்
2. போர் யானை வீரனைத் தாக்கியதால்
3. குதிரை போர் வீரர்களைக் கண்டதால்
4. போர் யானை அதிரும் வகையில் பிளிறியதால்

( )

Q16. மரம் வீரனின் கையோடு வரக் காரணம் என்ன?

1. அம்மரம் பட்டுப் போயிருந்ததால்
2. வீரன் மிகுந்த பலசாலியாய் இருந்ததால்
3. குதிரை மிகவும் வேகமாக ஓடியதால் ( )
4. அம்மரம் இலையுதிர்ந்து போயிருந்ததால்

Q17. எதிரிகள் போர் செய்யாது ஏன் ஓடத் தொடங்கினர்?

1. மரத்தோடு குதிரை மீது வந்த வீரன் கத்தியதால்
2. குதிரை தங்களை நோக்கி அதிவேகமாய் வந்ததால்
3. வீரன் தங்களைக் கொன்றுவிடுவான் என்று அஞ்சியதால் ( )
4. சிம்மபுர வீரர்கள் தங்களைவிட வலிமையானவர்கள் என்று நினைத்ததால்

B4. <u>சொற்பொருள்</u>

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. <u>*அவற்றின் பொருளை உணர்த்தும்*</u> சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(6 மதிப்பெண்கள்)

Q18. ஆணையிட்டான்

1. அறிவுறுத்தினான்
2. ஆலோசித்தான்
3. வேண்டினான்
4. கட்டளையிட்டான்

( )

Q19. மருண்டு

1. பயந்து
2. வியந்து
3. அதிர்ந்து
4. எதிர்த்து

( )

Q20. வறண்டு


1. வலித்து
2. உலர்ந்து
3. தணிந்து
4. சோர்ந்து

( )


B5. கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

*பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:*

# மல்லிகா மளிகைக் கடை



## திறப்பு விழா




இடம்: உட்லண்ஸ் தெரு **30**
கட்டட எண் **45**
நாள்: விடுமுறை நாள்
சனி**, 1** மே **2013**
நேரம்: காலை மணி **9**

***உட்லண்ஸ் வட்டாரத்தில் ஒரு புதிய மளிகைக் கடை!***

*நல்ல தரமான பொருள்களை வாங்க உடனே வாருங்கள் எங்கள் கடைக்கு.*

*திறப்பு விழா அன்று வரும் வாடிக்கையாளர்களுக்கு **$10** பற்றுச் சீட்டு வழங்கப்படும்.*

கடை நாள்தோறும் காலை மணி ***9*** முதல் இரவு மணி ***9*** வரை திறந்திருக்கும்.



**சிறப்புச்**

$50 வெள்ளிக்கு மேல் பொருள்கள் வாங்கினால் 10% சிறப்பு கழிவு உண்டு.
$100 வெள்ளிக்கு மேல் பொருள் வாங்கினால், அவற்றை வீட்டுக்கு அனுப்பும் சேவை உண்டு.

Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. *ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.* அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q21. திறப்பு விழா அன்று இக்கடைக்கு வரும் 20 வாடிக்கையாளர்களுக்கு என்ன தரப்படும்?

1. 10% சிறப்புக் கழிவு தரப்படும்
2. $10 பற்றுச்சீட்டு தரப்படும்
3. $50 பற்றுச் சீட்டும் 10% கழிவும் தரப்படும்
4. இலவசமான பொருள்கள் தரப்படும்

( )

Q22. மல்லிகா மளிகைக் கடை எந்தெந்த நாள்களில் திறந்திருக்கும்?

1. வார நாட்கள்
2. வார இறுதி
3. அன்றாடம்
4. விடுமுறை நாட்கள்

( )

Q23. மே 5-ம் தேதி இக்கடையில் $150 செலவு செய்யும் ஒரு வாடிக்கையாளர் என்னென்ன சலுகைகளை எதிர்ப்பார்க்கலாம்?

1. 10% கழிவும் $10 பற்றுச் சீட்டும்
2. 50% கழிவும் இலவச சேவையும்
3. வீட்டுக்குப் பொருள் அனுப்பும் இலவச சேவை
4. 10% கழிவும் வீட்டுக்குப் பொருள்களை அனுப்பும் இலவச சேவையும்

( )

*'அ' பிரிவு முடிவுற்றது*

'ஆ' பிரிவு

**C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

Q24. சிறு பிள்ளைகள் நெருப்போடு விளையாடுவது ஆபத்தான செயல். அவ்வாறு விளையாடினால் பொருள்கள் தீப்பற்றி ____________ சேதத்தை ஏற்படுத்தும்.

Q24. ( )

Q25. மாணவர்கள் படிப்பில் ____________ செலுத்த வேண்டும். அப்போதுதான் அவர்கள் தேர்வுகளில் சிறப்பாகச் செய்து கல்வியில் சிறந்து விளங்குவர்.

Q25. ( )

Q26. ரவியின் தம்பிகள் இருவரும் சண்டையிட்டனர். ரவியின் தாயார் அவர்களை ____________ விடுமாறு ரவியிடம் கூறினார்.

Q26. ( )

Q27. குழந்தையின் சுட்டித்தனம் தாயாரை மகிழச் செய்தது. அவர் குழந்தையைக் கட்டி ____________ முத்தமிட்டார்.

Q27. ( )

Q28. ____________ செய்தவர்களைக் காவலர்கள் கைது செய்தார்கள். அவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றத்தை நிரூபிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

Q28. ( )

| | |
|---|---|
| (1) அக்கறை | (2) எறிந்து |
| (3) அணைத்து | (4) கலகம் |
| (5) விளக்கி | (6) அக்கரை |
| (7) கழகம் | (8) விலக்கி |
| (9) எரிந்து | (10) அனைத்து |

மதிப்பெண்கள்:

**D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்றச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்தெடுத்து அதன் அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| அமெரிக்கா சென்று மேற்படிப்புப் பயில வேண்டும் என்பது குணாவின் நீண்ட நாள் கனவு. அதற்கு அவன் (Q29)__________ செய்தபோது, அவன் தந்தை, "குணா! அங்குக் கல்லூரிப் படிப்பிற்கு இங்குள்ளதைவிட பல மடங்கு செலவாகுமே, நீ எப்படி (Q30)__________?" என்று கேட்டார். அதற்குக் குணா, "அங்குப் படிக்கச் சேர்கிறவர்களில் பெரும்பாலோருக்கு உதவித் தொகை கிடைத்துவிடும். அப்படிக் கிடைக்கவில்லை என்றால் வங்கியிலிருந்து கடன் பெற்றுக்கொள்ளலாம்," என்றான். அதன் பிறகும் அவன் தந்தை, படித்து முடித்தபின் அங்கு வேலை கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வது என்று (Q31)__________. "அப்பா! இப்படி (Q32)__________ அதிகமாகவும் யோசித்தால் மேற்படிப்புப் படிக்கவே முடியாது. முதலில் படிப்பேன்; பிறகு ஏதாவது பிரச்சனை வந்தால் பார்த்துக்கொள்ளலாம்," என்று (Q33)__________ கூறிவிட்டுக் குணா அமெரிக்கா சென்றான்.<br><br>ஆனால், அங்கே அவன் எதிர்பார்த்த உதவித் தொகை கிடைக்கவில்லை. அதனால், அவன் வங்கியில் கடன் பெற்றான். அதுவும் போதாமல், (Q34)__________ வேலை செய்து மிகச் சிரமப்பட்டுப் பணம் சம்பாதித்து ஒருவழியாகச் சமாளித்தான். படித்து முடித்ததும், பொருளாதார மந்தநிலை ஏற்பட, வேலை கிடைக்காமல் (Q35)__________ "ஆஹா! இப்படியொரு நிலை ஏற்பட்டால் என்ன செய்வது என்று அப்பா கேட்டபோது அவர் பேச்சை நான் பொருட்படுத்தவில்லையே!" என்று எண்ணி குணா அப்போது வருந்தினான். | Q29. ( )<br>Q30. ( )<br>Q31. ( )<br>Q32. ( )<br>Q33. ( )<br>Q34. ( )<br>Q35. ( ) |

| | | |
|---|---|---|
| (1) சமாளிப்பாய் | (2) பொறுப்பாக | (3) பகுதிநேர |
| (4) யோசித்தார் | (5) ஏற்பாடு | (6) கேலியாகவும் |
| (7) திண்டாடினான் | (8) மகிழ்ந்தான் | (9) வினவினார் |
| (10) முழுநேர | (11) அலட்சியமாக | (12) ஆழமாகவும் |

மதிப்பெண்கள்:

**D8 சுயவிடைக் கருத்தறிதல்**

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

கோவிந்தன் ஒரு பணக்காரன் வீட்டில் சமையல் வேலை செய்து வந்தான். அங்கே அவனுக்குத் தங்குவதற்கு இடமும், அணிந்துகொள்ள ஆடைகளும், மூன்று வேளை உணவும் கிடைத்ததுபோக, சம்பளமாக இருநூறு வெள்ளியும் கிடைத்தது. அவன் தனி ஆளாக இருந்ததால், அவனுக்குத் தேவைகள் குறைவாக இருந்தன. அதனால், கிடைத்த சம்பளம் அவனுக்குப் போதுமானதாக இருந்தது. கோவிந்தன் மனநிறைவுடன் வாழ்க்கையை நடத்தி வந்தான்.

ஒரு நாள் அவன் சமையலுக்காகக் காய்கறி வாங்கக் கடைக்குச் சென்றான். அப்போது, பக்கத்து ஊரைச் சேர்ந்த மாரியப்பனைச் சந்தித்தான். மாரியப்பன் ஓர் அதிகப்பிரசங்கி. அவன் தனக்குத் தேவையில்லாத காரியங்களில் ஈடுபட்டு வீண் வம்புக்குச் செல்வான். அவன் தன்னைக் கோவிந்தனிடம் அறிமுகப்படுத்திக்கொண்டு, பேசிக்கொண்டே அவனைப்பற்றிய விஷயங்களைச் சாமர்த்தியமாகத் தெரிந்துகொண்டான்.

பிறகு, அவன் கோவிந்தனைப் பார்த்து, "ஐயோ பாவமே! வெறும் இருநூறு வெள்ளி சம்பளத்திற்காகவா நீ இப்படி மாடாக உழைக்கிறாய்! உன்னுடைய திறமைக்கும் அனுபவத்திற்கும் நீ எங்கிருக்க வேண்டியவன் தெரியுமா? ஒரே ஒரு வார்த்தை சொல்! உன்னைக் கப்பலில் சமையற்காரனாகச் சேர்த்துவிடுகிறேன். இப்போது கிடைக்கும் சம்பளத்தைவிட உனக்குப் பத்து மடங்கு அதிகமாக, இரண்டாயிரம் வெள்ளி கிடைக்கும்!" என்றான். அதைக் கேட்டதும் கோவிந்தனுக்குப் பேராசை ஏற்பட்டது. கோவிந்தன் பணக்காரனிடம் சொல்லிக்கொள்ளாமல் மாரியப்பனுடன் புறப்பட்டுச் சென்று கப்பலில் சமையற்காரனாக வேலைக்குச் சேர்ந்தான்.

அங்குச் சென்ற பிறகுதான், தான் செய்தது முட்டாள்தனம் என்று கோவிந்தனுக்குப் புரிந்தது. கப்பலில் அவனுக்கு அதிகமாக வேலை கொடுத்து, அவனைச் சக்கையாய்ப் பிழிந்தெடுத்தார்கள். அவனுக்குச் சமைக்கத் தெரியாத மிகக் கடினமான உணவு வகைகளைச் சமைக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தினார்கள். மிகக் கடுமையாகவும் முரட்டுத்தனமாகவும் அவனை நடத்தினார்கள். மேலும், அவனிடம் பேசியபடி சம்பளமும் தரவில்லை. தான் முன்பு பணக்காரனிடம் வேலை செய்தபோது இதைவிட வசதியாகவும் மனநிறைவோடும் இருந்ததாகக்

கோவிந்தனுக்குத் தோன்றியது. அதனால், அவன் உடனடியாகக் கப்பல் வேலையை விட்டுவிட்டுத் தன் சொந்த ஊருக்கே திரும்பினான். அவன் பழையபடி பணக்காரனிடமே வேலைக்குச் சேர்ந்தான். சம்பளம் குறைவாக இருந்தாலும் அதில் கிடைத்த மனநிம்மதி அவனுக்கு மனநிறைவை அளித்தது.

Q36 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

Q36. கோவிந்தனுக்குப் பணக்காரன் வீட்டில் கிடைத்த சம்பளம் ஏன் அவனுக்கு மனநிறைவை அளித்தது? (3 மதிப்பெண்கள்)

Q37. மாரியப்பன் எப்படிப்பட்டவன்? (2 மதிப்பெண்கள்)

Q38. மாரியப்பன் எவ்வாறு கோவிந்தனைக் கப்பலில் வேலைக்குச் சேர ஆசை காட்டினான்? (4 மதிப்பெண்கள்)

Q39. எதனால் கோவிந்தன் மாரியப்பன் கூறியதுபோல் கப்பலில் வேலைக்குச் சேர முடிவெடுத்தான்?

(3 மதிப்பெண்கள்)

மதிப்பெண்கள்:

Q40. எக்காரணங்களால் கோவிந்தன் தான் கப்பலில் சமையற்காரனாக வேலைக்குச் சேர்ந்தது முட்டாள்தனம் என்பதை உணர்ந்தான்? (5 மதிப்பெண்கள்)

Q41. கோவிந்தன் எந்த எண்ணத்தோடு பழையபடி பணக்காரன் வீட்டிலேயே வேலைக்குச் சேர்ந்தான்?

(3 மதிப்பெண்கள்)

**P6 SA1**
**TESTPAPER 9**

சிராங்கூன் வட்டாரத்தில் தமிழ் வணிகர்கள்...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 4 | 2) 1 | 3) 3 | 4) 2 | 5) 2 | 6) 1 |
| 7) 2 | 8) 3 | 9) 4 | 10) 2 | 11) 3 | 12) 1 |
| 13) 3 | 14) 1 | 15) 4 | 16) 1 | 17) 4 | 18) 4 |
| 19) 1 | 20) 2 | 21) 2 | 22) 3 | 23) 4 | 24) 9 |
| 25) 1 | 26) 8 | 27) 3 | 28)4 | 29) 5 | 30) 1 |
| 31) 9 | 32) 12 | 33) 11 | 34) 10 | 35) 7 | |

36) கோவிந்தனுக்கு சம்பளமாக இருநூறு வெள்ளி பணம் கிடைத்தது. மேலும் பணக்காரன் வீட்டிலேயே தங்குவதற்கு இடமும், அணிந்து கொள்ள ஆடைகளும், மூன்று வேலை உணவும் கிடைத்தது.அது மட்டுமல்லாமல்
அவன் தனி ஆளாக இருந்ததால் அவனுக்குத் தேவைகளும் குறைவாகவே இருந்தன. அதனால் பணக்காரன் வீட்டில் கிடைத்த சம்பளம் அவனுக்கு மனநிறைவை அளித்தது.

37) மாரியப்பன் ஓர் அதிகப்பிரசங்கி.அவன் தனக்குத் தேவையில்லாத காரியங்களில் ஈடுபட்டு வீண் வம்புக்குச் செல்வான்.

38)மாரியப்பன் கோவிந்தனிடம் அவனுடைய திறமைக்கும் அனுபவத்திற்கும் அவன் எங்கோ இருக்க வேண்டியவன் என்று கூறினான். மேலும் கப்பலில் சமையல்காரனாக சேர்ந்தால் தற்போது கிடைக்கும் சம்பளத்தை விட பத்து மடங்கு அதிகமாக, இரண்டாயிரம் வெள்ளி கிடைக்கும் என்று கூறி மாரியப்பன் கப்பலில் வேலைக்குச் சேர ஆசை காட்டினான்.

39) கோவிந்தன் கூறியது போல் கப்பலில் வேலைக்குச் சேர்ந்தால் அதிக பணம் கிடைக்கும் என்ற பேராசை ஏற்பட்டதால் மாரியப்பன் கப்பலில் வேலைக்குச் சேர முடிவெடுத்தான்.

40) கப்பலில் கோவிந்தனுக்கு அதிகமாக வேலை கொடுத்து அவனை சக்கையாகப் பிழிந்தெடுத்தார்கள். அவனுக்குச் சமைக்கத் தெரியாத மிகக் கடினமான உணவு வகைகளைச் சமைக்கச் சொல்லிக் ட்டாயப்படுத்தினார்கள். மிகக் கடுமையாகவும் முரட்டுத்தனமாகவும் நடத்தினார்கள். மேலும் பேசியபடி சம்பளமும் தரவில்லை. இக்காரணங்களாலேயே கோவிந்தன் தான் கப்பலில் வேலைக்குச் சேர்ந்தது முட்டாள்த்தனம் என்பதை உணர்ந்தான்.

41) கோவிந்தன் பணக்காரன் வீட்டில் சம்பளம் குறைவாக இருந்தாலும் அதில் கிடைத்த மனநிம்மதி அவனுக்கு மனநிறைவை அளிக்கும் என்ற எண்ணத்தோடு பழையபடி பணக்காரன் வீட்டிலேயே வேலைக்குச் சேர்ந்தான்.